www.freetnbooks.com

V10SS

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2025

-----

# வகுப்பு 10

காலம்: 3.00 மணி | சமூக அறிவியல் | மதிப்பெண்கள்: 100

## பகுதி - I

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:** **14×1=14**

1) பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ் இ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஈ) டச்சு

2) ''சத்யார்த்தபிரகாஷ்'' எனும் நூலின் ஆசிரியர் யார்?
அ) தயானந்த சரஸ்வதி ஆ) அயோத்திதாசர் இ) அன்னிபெசன்ட் ஈ) நாராயணகுரு

3) வேலூர் கோட்டையில் புதிய இராணுவ விதிமுறைகளை அறிமுகப்படுத்த காரணமாயிருந்த தலைமைத் தளபதி யார்?
அ) கர்னல் பேன்கோர்ட் ஆ) மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங்
இ) சர் ஜான் கிரடாக் ஈ) கர்னல் ஆக்னியூ

4) விடுதலை நாளாக கீழ்கண்டவற்றில் எந்த நாள் அறிவிக்கப்பட்டது?
அ) 1930 ஜனவரி 26 ஆ) 1929 டிசம்பர் 26 இ) 1946 ஜூன் 16 ஈ) 1947 ஜனவரி 15

5) அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய ............ நீதிக்கட்சிகள் நிறுவப்பெற்றது.
அ) பணியாளர் தேர்வு வாரியம் ஆ) பொதுப்பணி ஆணையம்
இ) மாநில பணியாளர் ஆளெடுப்பு வாரியம் ஈ) பணியாளர் தேர்வாணையம்

6) பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ............
அ) பாபர் ஆ) தராய் இ) பாங்கர் ஈ) காதர்

7) உலகிலேயே மிக நீளமான அணை ............
அ) மேட்டூர் அணை ஆ) கோசி அணை
இ) ஹிராகுட் அணை ஈ) பக்ராநங்கல் அணை

8) இந்தியாவில் முதல் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட மாநிலம்
அ) குஜராத் ஆ) இராஜஸ்தான் இ) மகாராஷ்டிரம் ஈ) தமிழ்நாடு

9) **சரியான கூற்றினைக் கண்டுபிடி:**
**கூற்று** : தமிழ்நாடு தென்மேற்கு பருவக்காற்று காலங்களில் அதிக மழையைப் பெறுவதில்லை.
**காரணம்** : இது மேற்கு தொடர்ச்சி மலையின் மழை மறைவுப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.
அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு. ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று தவறு.

10) நடுவண் அரசின் அரசியலமைப்புத் தலைவர் ............ ஆவார்.
அ) குடியரசுத்தலைவர் ஆ) தலைமை நீதிபதி
இ) பிரதம அமைச்சர் ஈ) அமைச்சர் குழு

11) கீழ்க்காணும் மாநிலங்களில் எந்த ஒன்று ஈரவை சட்டமன்றத்தைப் பெற்றிருக்கவில்லை?
அ) ஆந்திரப்பிரதேசம் ஆ) தெலுங்கானா இ) தமிழ்நாடு ஈ) உத்திரப்பிரதேசம்

12) எத்தனை நாடுகள் இந்தியாவுடன் தங்களது எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன?
அ) 5 ஆ) 6 இ) 7 ஈ) 8

13) காட் (GATT) - இன் முதல் சுற்று நடைபெற்ற இடம்
அ) டோக்கியோ ஆ) உருகுவே இ) டார்குவே ஈ) ஜெனீவா

14) ஆசியாவின் டெட்ராய்ட் (Detroit) என அழைக்கப்படுவது ............
அ) தூத்துக்குடி ஆ) கோயம்புத்தூர் இ) சென்னை ஈ) மதுரை

## பகுதி - II

**II. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **10×2=20**
**(வினா எண் 28-க்கு கட்டாயமாக விடையளி)**

15) முஸ்தபா கமால் பாட்சா வகித்த பாத்திரமென்ன?

16) முதல் உலகப்போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்?

17) திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின் முக்கிய கூறுகளைத் தருக.

18) ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விவரிக்கவும்.

19) தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

20) தக்காண பீடபூமி குறிப்பு வரைக.

21) வளத்தை வரையறுத்து அதன் வகைகளைக் குறிப்பிடுக.

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com





22) 'தேரி' என்றால் என்ன?
23) கோயம்புத்தூர் ஏன் தென்னிந்தியாவின் 'மான்செஸ்டர்' என அழைக்கப்படுகிறது?
24) நீதிப்பேராணை (Writ) என்றால் என்ன?
25) பஞ்சசீலக் கொள்கைகளில் ஏதேனும் நான்கினைப் பட்டியலிடுக.
26) பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
27) நாட்டு வருமானம் என்றால் என்ன?
28) தங்க நாற்கரச் சாலைகள் பற்றி குறிப்பு வரைக.

## பகுதி - III

**III. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **10×5=50**
**(வினா எண் 42-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக:**
   i) 1932 ஜனவரி 26-இல் .............. புனித ஜார்ஜ் கோட்டையின் உச்சியில் தேசியக் கொடியை ஏற்றினார்.
   ii) பாளையக்காரர் முறை தமிழகத்தில் ............ என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
   iii) கிழக்குத் தொடர்ச்சி மலையின் தென்பகுதியில் உள்ள உயரமான சிகரம் ...........
   iv) இமயமலையில் உள்ள ஒரு சிறிய முடியாட்சி நாடு .............. ஆகும்.
   v) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி .............. ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.
30) இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
31) 1857 ஆம் ஆண்டின் பெரும்புரட்சிக்கான காரணங்கள் ஆய்வு செய்க.
32) தமிழ்நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்கு ஈ.வெ.ரா. பெரியாரின் தீர்மானகரமான பங்களிப்பை மதிப்பீடு செய்யவும்.
33) **வேறுபடுத்துக:**
   i) மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள்
   ii) கடல் மீன்பிடித்தல் மற்றும் உள்நாட்டு மீன்பிடித்தல்
   **காரணம் கூறுக:**
   விவசாயிகள் இரசாயன வேளாண்மையிலிருந்து கரிம (இயற்கை) வேளாண்மைக்கு மாறுகிறார்கள்.
34) காவிரி ஆறு குறித்து தொகுத்து எழுதுக.
35) இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக.
36) இந்திய பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?
37) அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.
38) பிரிக்ஸின்-நோக்கங்கள் எழுதுக.
39) உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.
40) சில நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக.
41) **கீழ்க்காண்பவற்றிற்கு காலக்கோடு வரைக:**
   1920 - 1940 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.
42) **உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
   (i) இத்தாலி (ii) ஜெர்மனி (iii) ஹிரோசிமா (iv) சான்பிரான்சிஸ்கோ (v) மொராக்கோ

## பகுதி - IV

**IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **2×8=16**

43) அ) ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க.

**(அல்லது)**

ஆ) தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது என்பதை விவாதிக்கவும்.

44) அ) **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
   (i) கிழக்குத்தொடர்ச்சி மலை (ii) தக்காணபீடபூமி
   (iii) கங்கை ஆறு (iv) கரிசல் மண் பகுதி
   (v) காரகோரம் (vi) பன்னா உயிர்க்கோள பெட்டகம்
   (vii) பன்னாட்டு விமான நிலையம் (ஒன்று) (viii) பெட்ரோலியம் கிடைக்குமிடம்

**(அல்லது)**

ஆ) **தமிழ்நாடு வரைபடத்தில் குறிக்கவும்:**
   (i) காவிரி ஆறு (ii) நீலகிரி
   (iii) கோடியக்கரை (iv) சென்னை
   (v) மேற்குத்தொடர்ச்சி மலை (vi) பழவேற்காடு ஏரி
   (vii) நிலக்கரி கிடைக்குமிடம் (ஒன்று) (viii) மேட்டூர் அணை

------------

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner